**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09 ம் நாள் வியாழக்கிழமை**

O.S. 48/2022

வாதி தரப்பு சாட்சியாகிய PW2-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மோகன சுந்தரம் | தாலுக்கா | : | திருவாரூர் |
| த/பெ | : | ஜெயராமன் | கிராமம் | : | திருவாரூர் |
| ஜாதி | : | | தொழில் | : | பாத்திர கடை தொழில் |
| சமயம் | : | | வயது | : | 46/25 |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 5 ம் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

கடந்த 28.08.1997 ம் தேதியிட்ட எனது அத்தை இந்திரா எனது சகோதரி 3 ம் வாதி மீனாட்சிக்கு எழுதி வைத்த பதிவு சுத்த கிரய சாசனம் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆகவும்,

கடந்த 28.08.1997 ம் தேதியிட்ட எனது சித்தப்பா வி.கே.எம். இராதாகிருஷ்ணன், எனது அத்தை மகன் விஜயக்குமார் என்பவருக்கு எழுதிக் கொடுத்த பதிவு சுத்தகிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.8** , ஆகவும்

தாவா சொத்தில் உள்ள நடைபாதை மற்றும் பிரதிவாதியின் வீட்டின் சுற்றுசுவரைக் காட்டும் புகைப்படம் (எண்ணிக்கை 6) குறுந்தகடுடன் (எண்ணிக்கை 1) **வா.சா.ஆ 9,** ஆகவும் குறியீடு செய்து தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்ய வேண்டி கோரப்பட்டுள்ள குறுந்தகடுடன் கூடிய புகைப்படங்களுக்கு BSA Section 63(4) ன் கீழ் உரிய சான்றிதழ் தாக்கல் செய்யப்படாத காரணத்தால் அனுமதிக்கதக்கதல்ல என்றும் மேற்படி புகைப்படங்களில் கண்டுள்ளவை தாவா சொத்திற்கு உரியவை அல்ல என்றும் ஆட்சேபணை செய்யப்பட்டது. வாதிகள் தரப்பில் விசாரணை காலத்திற்குள் உரிய சான்றிதழ் தாக்கல் செய்யபடுவதாக உறுதியளித்ததன் பெயரிலும் புகைப்படங்களில் கண்டுள்ள சொத்து குறித்து விசாரணையில் அறியவரும் என வாதிகள் தரப்பில் கூறியதன் அடிப்படையிலும் பிரதிவாதி ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.)

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது **வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.9**--- வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.10.09 18:06:15 +0530